1993 அக்டோபர் 29]

முற்பகல் 10–10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி வேலைப்பளுவைப் பொறுத்தவரையிலும் அவசியம் இல்லை என்ற கருத்துத்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தூரம் ஒன்றை மட்டுமே வைத்துக்கணக்கிட முடியாது. அந்தத் தூரமும் அதிக தூரம் இல்லை. சென்று வரலாம் என்ற அள விற்குத்தான் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லும் போதெல்லாம் ஆராயப்பட்டுத்தான் வருகின்றது. ஆனால் அதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படும் பொழுதுதான் கவனிக்கப்பட முடியுமே தவிர, அது இல்லாமல் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு கருவூலம் வேண்டும் என்ற கோரிக்கை யினுடைய அடிப்படையிலே நிறுவுவதற்கு வழிவகை இல்லை. அதற்கு அவசியம் ஏற்பட வேண்டும். அதற்கான சூழ்நிலையும் ஏற்படுதல் வேண்டும். அந்தச் சூழ்நிலையும் அவசியம் ஏற்பட்டால் அரசு கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 62, திரு. பே. தர்மலிங்கம், திரு. டி. வேலையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

62—

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஸ்கேனர் கருவி.

*9342— திரு. பே. தர்மலிங்கம், திரு. டி. வேலையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் ஸ்கேனர் (Scanner) கருவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் என்ல், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒரு முழு உடல் காட்டும் கருவி (whole body scanner) வாங்கி நிறுவனம் செய்வதற்கு சுமார் ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாய் செலவு ஆகும். எனவே திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்கு ஸ்கேனர் கருவி வழங்குவது குறித்து இரண்டாம் பகுதி திட்டத்தில் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பாளையங்கோட்டை சித்த மருத்துவமனையில் பயிலும் மாணவ மாணவிகள் சித்த மருத்துவ மூலிகை ஆராய்ச்சிக்காக டூர் செல்வதற்கு 25 வருடங்களாக வழங்கப்படாத தனிப் பேருந்தை பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரிக்கு வழங்கியமைக்காகவும், பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் இயற்கை மருத்துவப் பிரிவை தொடங்க இருப்பதற்காவும் இன்றையதினம் ஃபுல் பாடி ஸ்கேன் வாங்க அரசு பரிசீலனை செய்யும் என்று சொன்னதற்காகவும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வ. உ. சிதம்பரனார் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு மத்தியில் பாளையங்கோட்டையில் அமைந்துள்ளது. இந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 'அல்ட்ரா ஸ்கேன்' கருவிதான் உள்ளது. சி. டி. ஸ்கேன் அதாவது 'ஃபுல் பாடி ஸ்கேன்' கருவி இல்லை. இதனால் இந்த மூன்று மாவட்டங்களிலும், தலையில் காயம் அடைந்தவர்கள் சிகிச்சை பெற வேண்டி மதுரைக்குத் தான் செல்ல வேண்டியுள்ளது ஆகவே இந்த மூன்று மாவட்ட மக்களின் நலன் கருதி, இன்றையதினம், சி.டி. ஸ்கேன் கருவி ஃபுல் பாடி ஸ்கேன் கருவி அமைத்துத் தருகிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி அமைகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது அதற்கு ரூ. 1.60 கோடி ஆகிறது. அதற்கு நிதி அதிகமாகிறது. வருகின்ற பகுதி 2 திட்டத்தில் அதைப்பற்றி பரிசீலனை செய்கிறோம் என்று நான் தெரிவித்திருக்கிறேன். எனவே அந்தப் பரிசீலனை செய்கிறபோது, நிதிநிலைமைக்கு ஏற்பதான் நடவடிக்கை எடுக்க முடியும். எனவே அதுதான் பதிலே ஒழிய, நான் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் பரிசீலனைக்கே, அந்த நிதிநிலைமைக்கே போகவில்லை. எனவே நிதியமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். பிறகு அவர் என்னை அழைத்துக்

1993 அக்டோபர் 29]

கேட்பார்கள், எப்படி சொன்னாய் என்று. இதனை பரிசீலனை செய்து முடிவு எடுப்பதற்கு முன்னால் எப்படிச் சொன்னாய் என்று என்னைக் கேட்பார்கள். எனவே இதிலே முடிவு எடுத்த பின்னர்தான் உறுதியாகச் சொல்லமுடியும்.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர். அவர்களே. மதுரைக்குத் தெற்குப் பக்கத்தில் உள்ள 7, 8 மாவட்டங்களில் தேசிய நெடுஞ்சாலை எண் 7—ல் இப்போதெல்லாம் அதிகமாக சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றது. முன்பெல்லாம் 1, 2 பேர்கள்தான் இறந்தார்கள். என்றுப், 2, 3 பேர்கள் காயப்பட்டார்கள் என்றும் செய்திகள் வந்தது. ஆனால் இப்போதெல்லாம் சாலை விபத்துக்களில் 10, 20 பேர்கள் இறந்தார்கள் என்றும் 30, 40 பேர்கள் காயம் அடைந்தார்கள் என்று வருகின்ற செய்தி சாதாரண, அன்றாடச் செய்தியாகி விட்டது. நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூட நெல்லை மாவட்டத்திற்குச் சுற்றுப் பயணம் வருகிறபோது, 2, 3 தடவை நிறைய பேர்கள் காயம் பட்டு, ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதை எல்லாம் அவர்கள் நேரிலே பார்த்திருக்கிறார்கள். ஆகவே ரூ. 1.60 கோடியாகும் என்று சொன்னாலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற தேவையைக்கணக்கில் கொண்டு பார்க்கிறபோது இது ஒரு பெரிய தொகையாகத் தெரியவில்லை. மேலும் இதை நாங்கள் முழு உருவ ஸ்கேனர் என்றுதான் கொடுத்திருந்தோம். ஆனால் இதிலே ஸ்கேனர் என்று இருக்கிறது. மதுரைக்குத் தெற்குப் பக்கத்தில் வேறு வசதியே இல்லாத சூழ்நிலையில் மிகப் பயங்கரமான சூழ்நிலையில் ஆஸ்பத்திரியில் எப்போது பார்த்தாலும் நிறைய கூட்டமாக, இந்தத் தேவை இருந்துகொண்டே இருக்கிறது அங்கே மருத்துவர்களும் ஸ்கேனர் இல்லாத காரணத்தால் என்ன செய்வதென்றே புரியாமல் 'இன்வெஸ்டிகேஷன் கம்ப்ளீட்' ஆகாத நிலையில் மேலெழுந்த வாரியாகத்தான் திருப்தி இல்லாத நிலையிலே அங்கே சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள் ஆகவே நிதி இல்லை என்கிற காரணத்தைக். காட்டாமல் உடனடியாக சிறப்பு அம்சமாக கருதி, இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருதி, அதற்கான தொகையை உடனே வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதை உங்கள் மூலமாக கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையில் 'ஹோல் பாடி ஸ்கேனர்' தேவை என்பதிலே ஒரு மாறுபாடான கருத்து நிச்சயமாக இருக்கவே முடியாது. திருநெல்வேலி மருத்துவக்

கல்லூரி மருத்துவ மனையிலே கண்டிப்பாக, அவசியமாக அந்த 'ஹோல் பாடி ஸ்கேனர்' வாங்கி வைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. எனவே தான் அந்தப் பகுதியிலே நான் வந்திருந்தபொழுது கூட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோன்ற கோரிக்கைகளை என்னிடத்திலே தெரிவித்தபோது அரசாங்கத்திற்கு இருக்கிற நிதிப் பிரச்சினை ஒரு பக்கம் இருந்தாலும், அங்கேயிருக்கின்ற தொழிலாளர்களைப் பயன்படுத்தி, ஏதாவது ஒரு தொகையை அவர்கள் வசூல் செய்து அதற்காகக் கொடுத்தால் மீதித் தொகையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு செய்வதற்குக் கொஞ்சம் சுலபமாக இருக்குமென்று சொல்லி, நானே கூட சில தொழிலதிபர்களோடு பேசினேன். எனவே அவர்களும் கூட அதைச் செய்வதற்கு ஒப்புதலைத் தந்தார்கள். அப்போதிருந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கூட தெரிவித்து விட்டு வந்தேன். இப்போது இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் அதைத் தெரிவிப்பதற்கு நான் ஏற்பாட்டைச் செய்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள், யாராக இருந்தாலும் இதிலே கொஞ்சம் அக்கறை எடுத்து ஒரு பகுதியை அவர்கள் வசூல் செய்து கொடுப்பார்களேயானால் மீதித் தொகையை அரசு ஏற்றுக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். அரசாங்கத்திற்குக் கடமை இருக்கிறது என்று சொன்னாலும் அவர்களும் அதிலே அக்கறை காட்டலாம் என்பதற்காகத்தான் நான் இங்கே இதைத் தெரிவிக்கிறேன். எனவே அந்த முயற்சியை எடுத்தால் கொஞ்சம் வேகமாக நாம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அதற்கான ஏற்பாட்டை அப்போது செய்ய வசதியாக இருக்கும். நம்முடைய சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே கூட ஸ்கேனர் வைப்பதற்காக நடவடிக்கை எடுத்த போது அரசாங்கத்திலே நிதி பிரச்னை ஏற்பட்டபோது கூட முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுத்தார்கள். எனவே பொது மக்களும் இதிலே பங்கு கொண்டால் நாம் இதைச் செய்வதற்கு சுலபமாக இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: வினா எண் 63, திரு. ஆ. கு. சீனிவாசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

63—

<u>பெரணமல்லூரில் அரசு மருத்துவமனை ஒன்றினை அமைத்தல்</u>

*19081—திரு. ஆ. கு. சீனிவாசன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—